பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 13 | சனிக்கிழமை | 28.12.2024 | அதிர்வு 148

## ஏப். 5ஆம் திகதி குட்டித் தேர்தல்?




உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர் வரும் ஏப்ரல் 5ஆம் திகதி நடத்துவது தொடர்பில் 05



# இந்திய மீனவர்களுடன் இனிப் பேச்சு கிடையாது!

## யாழில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் பகிரங்கம்




(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களுடன் இனிப் பேச்சு வார்த்தை கிடையாது என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05

# கிளிநொச்சியில் சுயாதீன ஊடகவியலாளரை கடத்த வந்த இருவர் இன்னும் கைதாகவில்லை

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மண்ணின் சுயாதீன ஊடகவியலாளரைக் கடத்த முயன்றனர் எனச் சந்தேகிக்கப்படும் இருவரைப் பொலிஸார் இன்னமும் கைது செய்யவில்லை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகத்தில் பணிபுரியும் முருகையா தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை தனது கடமையை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, கறுப்பு நிற வாகனத்தில் வந்த இருவர் அவரைக் கடத்திச் செல்ல முற்பட்டதுடன் முயற்சி தோல்வியடைந்ததையடுத்து அவரைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒருவரின் விவரங்கள் பொலிஸாரிடம் இருப்பதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் 05






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு முக்கிய முடிவு – தீர்மானம் – ஒன்றை எடுப்பதற்காக இன்று காலை வவுனியாவில் கூடுகின்றது.

கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தான் விலகுகின்றார் எனத் தெரிவித்து மாவை சேனாதிராஜா எழுதிய ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டு விட்டார் எனக் கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் பதில் கடிதம் அனுப்பிய பின்னணியில் அந்த ராஜினாமாத் தொடர்பில் முடிவெடுப்பதற்காக மத்திய குழு இன்று கூடுகிறது.

தேவைப்பட்டால் மத்திய குழுவில் இவ்விடயத்தில் முடிவெடுப்பதற்காக வாக்கெடுப்பு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், எண்ணிக்கை ரீதியில் மாவை சேனாதிராஜா மிகவும் பலவீனமான கட்டத்தில் இருக்கின்றார் எனத் தெரிகிறது.

மத்திய குழுவில் இப்போது இருக்கின்ற உறுப்பினர்கள் மொத்தம் 36 பேர். அதில் 10 பேர் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் 05



# 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற வாக்குறுதியை மஹிந்தவிடமிருந்து பெற்றவர் மன்மோகன் சிங்

## இரங்கல் செய்தியில் முன்னாள் எம்.பி. சுமந்திரன் தெரிவிப்பு

“அமரர் கலாநிதி மன்மோகன் சிங், இந்தியாவின் பிரதமராக இருந்த காலத்தில், ”13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை ஏற்படுத்தப்படும்” என்ற வாக்குறுதியை இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பெற்றிருந்தார்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“முன்னாள் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் (வயது 92) மறைவுக்கு எமது மனப்பூர்வமான அஞ்சலிகள். அவர் இந்தியாவின் பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தார். 2011 இல் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான கூட்டறிக்கையில் “13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை ஏற்படுத்தப்படும்” என்ற வாக்குறுதியைப் பெற்றவர்.

அவர் பிரதமராக இல்லாத சமயத்திலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கச் சென்றபோது நாம் அவரை, அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி கூறி உரையாடியிருந்தோம். இந்தியாவின் பொருளாதார எழுச்சிக்குக் காரணகர்த்தாவாக இருந்த அன்னாரின் மறைவுக்கு மீண்டும் எமது மனப்பூர்வமான அஞ்சலிகள்!!” – என்றுள்ளது.

# வெள்ளத்தால் சேதமடைந்த 80,000 ஏக்கர் விளைநிலங்கள்



கடந்த நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த சுமார் 80,000 ஏக்கர் விளைநிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட பயிர்ச்சேதங்கள் தொடர்பான ஆய்வுகள் தற்போது நிறைவடைந்துள்ளன என சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களுக்கான இறுதி அறிக்கைக்கு பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பயிர்ச்சேதங்கள் தொடர்பான ஆய்வுகளை நாளைமறுதினமும் அனுராதபுரம், குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் பயிர்ச்சேதங்கள் தொடர்பான ஆய்வுகளை எதிர்வரும் 30 ஆம் திகதியும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் சேதமடைந்த பயிர்களை ஆய்வு செய்யும் பணிகள் விவசாய அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விவசாய அமைப்புக்களின் பங்களிப்புடன் இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# கடற்றொழில் அமைச்சர், ஆளுநர், மாவட்ட செயலருடன் பருத்தித்துறை - முனை கடற்றொழிலாளர்கள் சந்திப்பு!

## தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைப்பு

யாழ். வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட செயலர் ஆகியோரை நேற்று சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் மகஜர்களையும் கையளித்தனர்.

“பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்களின் மீன்பிடி வாடிகள் அகற்றப்பட வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் இரண்டு வாரங்களின் பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரையோரம் பேண் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை பூராகவும் கடற்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடிவாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமே மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது இவ்வாறிருக்க பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்களின் கரையோர வாடிகளை மாத்திரம் அகற்றுமாறு கரையோர பேண் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது ஏன்? இதனால் எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படையும்.” – என்று மீனவர்கள் அமைச்சரிடமும் ஆளுநரிடமும் மாவட்ட செயலரிடமும் முறையிட்டனர்.

இதனை உடன் நிறுத்துமாறு அமைச்சர் இ.சந்திரசேகர் குறித்த திணைக்கள அதிகாரிக்குத் தெரியப்படுத்தியதுடன் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

நாடு பூராகவும் இந்த நிலை இருக்கும்போது குறித்த ஒரு இடத்து மீனவர்களுக்கு மாத்திரம் வாடிகளை அகற்றுமாறு அரச உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தியுள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது.

# 160 கோடி ரூபா நிதி மோசடி செய்த தம்பதி விமான நிலையத்தில் கைது

160 கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டு இந்தியாவுக்குச் தப்பிச் தப்பிச் சென்ற தம்பதியினர் மீண்டும் நாடு திரும்பிய சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் முன்னெடுத்த சோதனையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கொழும்பு 5 ஐ சேர்ந்த அவர்கள் 2021 ஆம் ஆண்டு படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தனர்.

49 வயதான கணவர் மற்றும் 43 வயதான மனைவி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தம்பதியினர் நாட்டின் பல பகுதிகளிலும் பாரிய



அளவிலான நிதி மோசடியில் ஈடுபட்டவர்கள் என முறையிடப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராக கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு நீதிமன்றங்களின் ஊடாக 08 வெளிநாட்டு பயணத் தடைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



# 2025ஆம் ஆண்டில் ஆரம்பமாகும் திட்டங்கள் ஒக்டோபருக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் அறிவுறுத்து

2025ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் ஒக்டோபர் மாதத்துக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய நிதி ஆணைக்குழுவால் வாக்குப்பணக்கணக்கு 2025ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான 4 மாதங்களுக்குமான நடைமுறை, மூலதன செலவின ஒதுக்கீட்டு விவரம் வடக்கு மாகாணத்துக்குரியது அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உத்தியோகபூர்வமாக வெளியிடும் நிகழ்வு வடக்கு மாகாண பேரவைச் செயலக மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிடைக்கும் நிதியை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்திய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், நிதி ஆணைக்குழுவின் தெளிவான வழிகாட்டல்களுக்கு அமைவாக திட்டங்களைத் தயாரிக்குமாறும் கோரினார்.

ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளை நிறைவுறுத்துமாறு பிரதிப் பிரதம செயலர் (நிதி) எஸ்.குகதாசன் அறிவுறுத்தினார்.

பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர், அடுத்த ஆண்டுக்குரிய மிகப் பெரிய திட்டங்களை விரைந்து ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒப்பந்தகாரர்கள் தொடர்பான பட்டியலை கைவசம் வைத்திருக்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் ஒப்பந்தகாரர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் அவர்களில் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்க வேண்டியவர்கள் தொடர்பான விவரங்களையும் தயாரித்து வைத்திருக்க வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாதமும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கைகள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலர் உள்ளிட்ட வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், பணிப்பாளர்கள், மாகாண திறைசேரி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.













## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவை சேனாதிராஜா முன்னர் தாமே நேரடியாக தேர்ந்தெடுத்து மத்திய குழுவுக்கு நியமித்தவர்கள். அப்படி இருந்தும் மத்திய குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் – அவர் தலைவர் பதவியில் தொடர்வதற்கு எதிரான கருத்தில் – உறுதியாக இருக்கின்றனர் எனத் தெரிகிறது.

கட்சிக்கும், மாவை சேனாதிராஜாவுக்கும் அபகீர்த்தி ஏற்படாமல் இருப்பதற்காக ஏற்கனவே வழங்கிய ராஜினாமாக் கடிதத்தை உறுதிப்படுத்தி, இவ்விடயத்தை ஒட்டி வாக்கெடுப்பு நடப்பதை தவிர்க்குமாறு கோரி மத்திய குழுவின் 18 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய கடிதம் நேற்று இரவு சட்டத்தரணி சயந்தன் தலைமையில் சென்ற நான்கு பேர் கொண்ட கட்சியின் குழுவினால் தெல்லிப்பளையில் மாவையினுடைய வீட்டில் வைத்து அவரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

இந்தப் பதினெட்டு பேர் தவிர, மேலும் மூன்று பேர் இக்கடிதத்தில் ஒப்பமிடக் கூடிய சந்தர்ப்பத்தில் இல்லாத காரணத்தினால் ஒப்பிடவில்லை என்பதும், அவர்கள் இன்று கூட்டத்துக்கு வந்து அந்த நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பதும் நேற்று இரவு மாவை சேனாதி ராஜாவுக்கு நேரடியாக தெரியப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

அந்த கடிதத்தில் அடங்கியிருந்த விடயங்கள் வருமாறு:-

“திரு.மாவை.சேனாதிராசா அவர்கள், அரசடி வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

ஐயா,

கடந்த 2004-12-14 ஆம் திகதியன்று வவுனியாவில் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தங்கள் தலைமை தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றதும், பின்னர் இது சம்பந்தமாக வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்காக மீண்டும் எதிர்வரும் 2024-12-28 ஆம் திகதியன்று மத்திய செயற்குழு கூடுவதாக அறிவிக்கப்பட்டதும் தாங்கள் அறிந்ததே.

ஆயினும், இது விடயமாக மத்திய செயற்குழுவில் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுவது கட்சியினதும் தங்களதும் நற்பெயருக்கு ஆரோக்கியமாதைல்ல என்பது தொடர்பில் மத்திய செயற்குழு உறுப்பிரைர்களாகிய நாங்கள் மிகுந்த கரிசனையுடையவர்களாக இருக்கின்றோம்.

எனவே தாங்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற பொறுப்பிலிருந்து பதவி விலகுவதாக ஏற்கனவே செய்த அறிவித்தலை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்த விடயத்தை சுமுகமாகத் தீர்த்து வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.”

– என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய குழுவில் 36 உறுப்பினர்களில் 21 பேர் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரான தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அவர்கள் 21 பேரும் இன்றைய கூட்டத்தில் நிச்சயமாக கலந்து கொள்வார்கள் என உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதே சமயம் குகதாசன் எம்.பி. (இப்போது வெளிநாட்டில் இருக்கிறார்) உட்பட மற்றைய சிலர் இன்றைய கூட்டத்துக்குச் சமுகம் தர மாட்டார்கள் எனத் தெரிகிறது.

ஆகையினால், இன்றைய கூட்டத்தில் தம்முடைய பலவீனமான நிலைமையை உணர்ந்து மாவை சேனாதிராஜா புத்திசாலித்தனமாக கூட்டத்துக்கு சமுகம் தராமல் விடக்கூடும். ஆனாலும் பதவியாசை மிஞ்சிய அவர் அதனை இலகுவாக விட்டுவிட மாட்டார் என்றும் கூடக் கருதப்படுகின்றது.

மாவை சேனாதிராஜாவை ஆதரிக்கும் தரப்பினர், மாவைக்கு ஆதரவான நிலை மத்திய குழுவில் இல்லை என்பதால் அந்தத் தலைமை பதவி அடுத்து கட்சி யாப்புப்படி சிரேஷ்ட துணைத் தலைவரான சீ.வி.கே.சிவஞானத்திற்குக் கிடைக்காமல் தடுப்பதற்காக, வேறு ஒருவரைப் பதில் தலைவர் பதவிக்கு பிரேரிக்க ஓடியாடித் திரிந்தனர் என்று நேற்று மாலை தகவல் கிடைத்தது.

நிர்வாக செயலாளர் குலநாயகத்தை பதில் தலைவராக்கும் அத்தரப்பின் முயற்சிக்கு இணக்கம் தெரிவிக்க குலநாயகம் அடியோடு மறுத்துவிட்டார் எனவும் அறிய வந்தது.

கட்சியின் மிக நீண்ட கால மூத்த உறுப்பினரான குலநாயகம் கட்சியின் யாப்புப் பேணப்பட வேண்டும், அதற்கு முரணான வகையில் பதில் தலைவர் நியமனம் இடம் பெறக் கூடாது என்று திட்டவட்டமாகவும் உறுதியாகவும் கூறிவிட்டார் என்று தெரிகின்றது. அதேசமயம் மாவை சேனாதிராஜா தலைமை பதவியில் இருந்து விலகும் கடிதத்தை அவரே தாமாகவே மீள உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த கடிதத்தில் குலநாயகமும் ஒப்பமிட்டிருக்கின்றார் எனத் தெரியவந்தது.

தமிழரசுக் கட்சியின் தலையெழுத்து பெரும்பாலும் இன்று முடிவாகும். மாவை சேனாதிராஜாவை தலைமை பதவியில் தக்க வைக்கும் தங்கள் முயற்சி சரிவராது என்பதை உணர்ந்து கொண்டுள்ள தரப்பினர் இன்றைய கூட்டத்தைக் குழப்புவதற்காக ஆரம்பம் முதல் எத்தனிக்கக் கூடும் என்ற கருத்து நிலைப்பாடும் சில வட்டாரங்களில் நிலவுகின்றது.

ஆயினும் இந்தக் கூட்டத்தை தமிழரசுக் கட்சி நடத்தி முடிக்காவிட்டால் அதன் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பது தெளிவானது.

பொதுத் தேர்தலில் தனக்கு ஏற்பட்ட பின்னடைவு குறித்து கட்சி ஆராய்வதற்கு கூட இன்னும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பொதுத் தேர்தல் சமயத்தில் ராஜினாமா நாடகத்தை நடத்தி, கட்சியை பெரும் பின்னடைவுக்குள் தள்ளியமை மட்டுமல்லாமல், கட்சியின் பிரசார நடவடிக்கைகள் எதிலும் பங்கு பற்றாமல், கட்சியைத் தோற்கடிக்க வைக்கக் கங்கணம் கட்டி நின்ற மாம்பழக் குழுவினருக்கு ஆசீர்வாதமும் ஆதரவும் வழங்கிக் குழப்பியவர் மாவை சேனாதிராஜா. அவரைக் கட்சியின் தலைமை பதவியில் இருந்து விடுவித்து, கட்சியை மீட்பதற்காகப் பொதுத் தேர்தல் முடிந்து ஒன்றரை மாதமாகியும் கட்சியின் மத்திய குழு போராடிக் கொண்டிருப்பது கட்சிக்குப் பெரும் துரதிஷ்டம்தான்...!

- - - - - - - - - - - - - -

## ஏப்.5ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

குறித்த தேர்தலுக்காக ஏற்கனவே பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்துவிட்டு, புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கான சட்ட திருத்தம் எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் அந்தக் காலப் பகுதியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதால் ஏப்ரல் மாதமே பொருத்தமான காலப்பகுதி என்று கருதப்படுகின்றது.

இதனடிப்படையிலேயே தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடவுள்ளது.

- - - - - - - - - - - - - -

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தம்மைக் கடத்த வந்த வாகனத்தை ஓட்டிச் சென்றவர் கிளிநொச்சி, பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் என நேற்றுமுன்தினம் மாலை அங்கு வந்த பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ததாக, தாக்குதலுக்குள்ளான கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் காலை வந்த மேற்படி நபர் தன்னையும், அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரி ஒருவரையும் திட்டியதாக முருகையா தமிழ்ச்செல்வன் சக ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

சக ஊடகவியலாளரை கடத்த முயன்ற இருவரையும் நேற்று மாலைக்குப் பின்னரும் பொலிஸார் கைது செய்யத் தவறியுள்ளனர் என்று பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல தமிழ் ஊடக நிறுவனங்களில் சுயாதீன ஊடகவியலாளர்களாகப் பணிபுரியும் முருகையா தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருள், மண், மணல் கடத்தல் தொடர்பான செய்திகளை வெளியிட்டு வந்துள்ளார்.

மேலும் முருகையா தமிழ்ச்செல்வன் தொடர்ந்தும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

- - - - - - - - - - - - - -

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது கடற்றொழில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இந்திய மீனவர்களுடன் இனிப் பேச்சுவார்த்தை கிடையாது. பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டன. இனிப் பேச்சுவார்த்தை இல்லை. யாரோடும் இனிப் பேச்சுவார்த்தை இல்லை.

மீன்பிடி அமைச்சில் உள்ள அதிகாரிகளுக்கும் இந்தியாவில் உள்ள அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. அந்தப் பேச்சுவார்த்தைகள் தொடரும். அது தொழில்நுட்ப ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பானவை.

இதேநேரம் வேறு விதமான மனிதாபிமான உதவிகளை நாடுவதோ, கொடுப்பதோ தொடர்பில் அப்படியான ஒரு பேச்சுவார்த்தைக்கு நாங்கள் செல்லப்போவதில்லை. இதுதான் எமது மனிதாபிமான நடவடிக்கை என்று நாங்கள் கூறுகின்றோம்.” – என்றார்.

# அதிகரித்த வருமானத்தை பதிவு செய்தது தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்



தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 150 சதவீத வருமான அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடந்த 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 1.42 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மொத்த வருமானத்தில் பின்னவல யானைகள் சரணாலயத்தினூடாக 61.4 சதவீத வருமானம் கிடைத்துள்ளது.


இதன்படி, பின்னவல யானைகள் சரணாலயத்தினூடாக மாத்திரம் 876 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அத்துடன், மொத்த வருமானத்தில் தெஹிவளை மிருகக்காட்சிசாலையினூடாக 22 சதவீத வருமானமும், ரிதியகம சபாரி பூங்காவினூடாக 9 சதவீத வருமானமும் பின்னவல திறந்த மிருகக்காட்சிசாலையினூடாக 7.5 சதவீத வருமானமும் கிடைத்துள்ளன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் அதிக வருவாய் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் அதிக வருவாயை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன மாரசிங்க தெரிவித்துள்ளார்.

# ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலினால் சுமார் நூறு பன்றிகள் உயிரிழப்பு



ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் காரணமாக நாட்டில் சுமார் நூறு பன்றிகள் உயிரிழந்துள்ளன.

யால, வில்பத்து வனப்பகுதிகளிலும் கம்பஹா, மீரிகம, பேராதனை மற்றும் இரத்தினபுரி போன்ற இடங்களிலும் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என வனஜீவராசிகள் திணைக்களத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

தற்போது காட்டுப் பன்றிகள் மத்தியில் இந்த நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இதன் தாக்கம் நாட்டில் உள்ள அனைத்து காட்டுப் பன்றிகளையும் பாதிக்கும் நிலை காணப்படுவதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் உள்ளிட்ட சில நோய்த்தாக்கம் காரணமாக நாட்டில் பன்றி இறைச்சி விற்பனையை தடை செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் கடந்த ஒக்டோபர் மாதம் நடவடிக்கை எடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டது.

மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் அதிகளவான பண்ணைகளில் இந்த நோய் பரவியிருந்த நிலையில், உயிரிழந்த பன்றிகளின் உடல்களை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# மக்களுக்கு மிகவும் சிறப்பான சேவைகளை உள்ளூராட்சி மன்றங்கள் வழங்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

"உள்ளூராட்சி அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (எல்.டி.எஸ்.பி.) ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொண்ட வளங்கள் மூலம் மக்களுக்கு மிகவும் சிறப்பான சேவைகளை வழங்க வேண்டும். அரச பணியாளர்கள் மக்களுக்கு விரைவான – அன்பான சேவையை முன்னெடுக்கின்ற ஆண்டாக 2025ஆம் ஆண்டு அமைய வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட உள்ளூராட்சி அபிவிருத்தி உதவித் திட்டத்தின் முடிவுறுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் வடக்கு மாகாணம் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதாக எல்.டி.எஸ்.பி. திட்டப் பணிப்பாளர் தனது உரையில் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மெச்சுரைச் சான்றிதழ்கள் ஆளுநரால் வழங்கப்பட்டன.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில்,

"கடந்த காலங்களில் வெளிநாட்டு உதவியில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்கான அனைத்து விடயங்களையும் மத்திய அரசே – கொழும்பே கையாண்டது. எமக்கு அது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் அந்தத் திட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தி முடிக்கப்படவில்லை. அந்த வெளிநாட்டு நிதிகள் திரும்பியிருந்தன.

ஆனால், எல்.டி.எஸ்.பி. திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி என பல சவால்களைச் சந்தித்தபோதும் சிறப்பாக செயற்படுத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது. துடிப்பான 5 உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும், இந்தத் திட்டத்துக்காக பணியாற்றிய உள்ளூராட்சி ஆணையாளர்களான பிரணவநாதன், பற்றிக் டிறஞ்சன், திருமதி தேவனந்தினி பாபு ஆகிய மூவரும் பாராட்டுக்குரியவர்கள். இந்தத் திட்டத்துக்கான நிதியை திரும்பிச் செல்லாமல் முழுமையாக செலவு செய்ததன் மூலம் எதிர்காலத்தில் இதைப் போன்ற திட்டங்களை நாம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஜனாதிபதி மாவட்ட செயலர்களுடனான கலந்துரையாடலில் அரச சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள நிலைப்பாட்டைக் கூறியிருந்தார். அது உண்மை. எந்தவொரு திணைக்களத்துக்கும் செல்லும் பொதுமகன், அந்தத் திணைக்களத்தில் யாராவது தெரிந்த ஒருவர் இருந்தால்தான் விடயங்களைச் செய்ய முடியும் என்ற நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்களை மறந்து, 2025ஆம் ஆண்டிலிருந்தாவது எமது திணைக்களங்கள் மக்களை மையப்படுத்திய சேவையை திறம்பட முன்னெடுக்க வேண்டும். மக்களுக்கான சேவை வழங்குவது ஒருபுறம் இருக்க, உங்கள் திணைக்களங்களை நாடி வருகின்ற மக்களை முதலில் மதியுங்கள். அதுவே மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும்." – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவனந்தினி பாபு, வடக்கின் 5 மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், யாழ். மாநகர சபை ஆணையாளர், வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புதிய அரசமைப்பு சாத்தியமா?

'ஆணை தாருங்கள், புதிய அரசமைப்பை உருவாக்குவோம்! புதிய அரசியல் கலாசாரத்தை - முறைமையை - ஏற்படுத்துவோம் என்றெல்லாம்!'- வானளாவ உயர்ந்த வாக்குறுதிகளை நாட்டு மக்களுக்கு வாரி வழங்கித்தான் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பின் பின்னர்தான் வெற்றி பெறும் நிலைமை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்குக் கிட்டியது. ஆனால் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னபோதும் நடைபெறாத சரித்திர நிகழ்வாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மிஞ்சிய வெற்றி ஒன்றை தனி ஒற்றை அரசியல் கட்டமைப்பான தேசிய மக்கள் சக்திக்கு இலங்கை மக்கள் வழங்கினார்கள்.

நாட்டில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான மிகப் பிரதான ஜனநாயக ஆயுதமாக இந்த மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை வெற்றி மக்களால் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என ஆரவாரமாக அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி இப்போது அந்த விடயத்தில் மெல்ல பின்னடிப்புக் காட்டி நழுவுவதாகத் தெரிகிறது.

புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர மூன்று ஆண்டுகள் செல்லும் என்று இப்போது அரசின் மூத்த தலைவர்கள் கூறுகிறார்கள் என்று தகவல் வெளிவருகின்றது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த சமயம் இதே கருத்தைத்தான் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவும் கூறியிருக்கிறார்.

'ஆறிய கஞ்சி பழம் கஞ்சி' என்பது போல அரசமைப்பு உருவாக்கம் ஒத்திபோடப்படுவது நிரந்தரமாக அதைக் கைவிடுவதற்கான ஏற்பாடோ என்று சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.

தனித்து நிறைவேற்று அதிகாரத்தை பெற்றிருக்கும் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்கு அதிகாரத்தின் மீதான பற்று - பிடி - விருப்பு - அதைக் கைவிட பின்னடிப்பை தந்து நிற்பதாக தோன்றுகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கம் தனது தனித்துவ அதிகாரத்தைக் கைநழுவச் செய்து விடும் என்பதால் முழு ஆட்சிக் காலமும் அந்த அதிகாரத்தை அனுபவிப்பதற்காக அந்த முயற்சியைத் தள்ளிப் போட வைக்க அது அவரைத் தூண்டுகின்றது என்றே தோன்றுகின்றது.

2015 - 2019 க்கு இடைப்பட்ட நல்லாட்சி அரசு காலத்தில் இதேபோன்று புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த முயற்சி அந்த ஆட்சிப் பீடத்தின் கடைசி இரண்டு வருடங்களில் முன்நகர்த்தப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதியும் மூத்த அரசியல் பிரமுகருமான மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஒரு கருத்தை முன் வைத்தார்.

“எந்த ஓர் அரசும் தான் ஆட்சிக்கு வந்த கையோடு, அச்சமயத்தில் மக்களிடம் பெற்ற ஆணையோடு, புதிய அரசமைப்பை கொண்டு வருவதுதான் முறை. ஆட்சியின் அந்தத்தில் - அடுத்த புதிய அரசு வரக் கூடிய சூழ்நிலையில் - இறுதி கட்டத்தில் - யாராவது புதிய அரசமைப்பை கொண்டு வர முயல்வார்களா? அது முட்டாள்தனமான வேலை அல்லவா?” - என்று அச்சமயம் ராஜபக்ஷ கேள்வி எழுப்பி இருந்தார்.

அதே வேலையைத்தான் இப்போது அநுர குமார திஸநாயக்கவின் அரசு செய்யப் போவதாகக் கூறுகின்றது.

இப்படி புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை ஒத்திப்போடுவது நிரந்தரமாக அந்த முயற்சிக்கு ஆப்படிக்கும் வேலையாக முடிந்துவிடும் என்றுதான் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

புதிய அரசின் செல்வாக்கும், மக்கள் ஆதரவும், தனித்துவ கட்டுறுதிக் கட்டமைப்பும் மங்கி, ஆட்சித் தரப்பின் மீது மக்களுக்கு அதிருப்தி உச்சமாக வரக் கூடிய காலத்தில், இத்தகைய முயற்சி எடுப்பது பலன் தராது. நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு நகலை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு நிறைவேற்றினாலும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதியையும் அதற்குப் பெற வேண்டும் என்பதை இந்த ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது.

செல்வாக்கின் உச்சியில் இருக்கையில் இந்த விடயத்தை விரைந்து செய்ய ஆட்சித் தலைமை தவறுமானால் காலம் கடந்து, அதனை அரசுத் தலைமை செய்யும் போது மக்கள் செல்வாக்கு அதற்கு எதிராகத் திரும்பிவிடும் ஆபத்து உண்டு.

அரசமைப்பு உருவாக்கம் என்பது வெறும் நாடாளுமன்ற பலம் மட்டும் தேவையான விடயம் அல்ல. அதையும் தாண்டிய பல விவகாரங்கள் அதற்குள் பொதிந்து கிடக்கின்றன. நாடாளுமன்றப் பலம் கிடைத்துள்ள இந்தச் சமயத்தில், மக்கள் ஆதரவும் செல்வாக்கும் நிலவும் இந்த வேளையில், இதனை செய்வதற்கு ஆட்சி தலைமை தவறுமானால், 46 வருடங்களாகத் தொடர்கின்ற - எதேச்சாதிகாரத்துக்கு வழி செய்கின்ற இந்த அரசமைப்பு அரை நூற்றாண்டு தாண்டியும் தொடரும் என்ற யதார்த்தத்தைத் தவிர்க்க முடியாமல் போகும்.



# தென் கொரிய பதில் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றம்

தென் கொரியாவின் பதில் ஜனாதிபதி ஹன் டக்-சூவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு வாரத்திற்கு முன்னர் ஜனாதிபதி யூன் சூக் யோலிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையில் அவர் தோல்வியடைந்தார்.

ஜனாதிபதி யூன் சூக் யோல் கடந்த 3 ஆம் திகதி கடுமையான இராணுவ சட்டத்தை அமல்படுத்தியமை காரணமாக அவர் பதவியிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

முன்னதாக தென் கொரியாவில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பினை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இடைக்கால ஜனாதிபதி ஹன் டக்-சூ மேற்கொள்வார் என பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின்போது குழப்பநிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




ஆளும் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் நடுவே ஒன்றுகூடி இந்த வாக்கெடுப்பு செல்லாது என கோஷமிட்டுள்ளனர்.



# நாசாவின் விண்கலம் சூரியனுக்கு அருகாமையில் சஞ்சரித்து சாதனை



நாசாவினால் அனுப்பப்பட்ட விண்கலம் ஒன்று சூரியனுக்கு மிக அருகாமையில் சஞ்சரித்து பாதிப்பு ஏதுவும் அற்ற நிலையில் சாதனை படைத்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விண்கலத்திலிருந்து சமிக்ஞைகள் வழமைபோல பெறப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

"பாக்கர் சோலர்" என பெயரிடப்பட்ட இந்த விண்கலத்தின் பயணத்தின் மூலம் எதிர்காலத்தில், சூரியனின் மேற்பரப்பிலிருந்து 38 லட்சம் மைல்களுக்கு அப்பால் இருந்து பாதுகாப்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது விண்கலம் பூமியிலிருந்து 9 கோடியே 30 இலட்சம் மைல்களுக்கு அப்பால் உள்ளமை குறிப்பிடத்தக்கது.


# மன்மோகன் சிங் காலமானதால் ஒருவார காலத்திற்கு துக்கதினம்

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான மன்மோகன் சிங் காலமானதை அடுத்து, அங்கு ஒருவார காலத்திற்கு துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முன்னாள் பிரதமரின் இறுதிச் சடங்குகள் முழுமையான அரச மரியாதையுடன் நடைபெறவுள்ள நிலையில், அனைத்து அரச நிகழ்வுகளையும் இரத்து செய்வதற்கு இந்திய அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், தனது 92 ஆவது வயதில் புதுடில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் காலமானார்.

பஞ்சாப்பில் 1932 ஆம் ஆண்டு பிறந்த மன்மோகன் சிங், இரண்டு தடவைகள் இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்துள்ளார்.



# அண்ணாமலையின் சாட்டையடி போராட்டம் தமிழக மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடு

## பா.ஜ.க. தெரிவிப்பு



அண்ணாமலையின் சாட்டையடி போராட்டம் தமிழக மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடு என தமிழக பா.ஜ.க. மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியின் அவலங்களை தோலுரித்துக் காட்டவும், அடுத்த தலைமுறை சீரழிந்து போவதை தடுத்து பாதுகாத்து, குழந்தைகள், பெண்கள் இளைஞர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதை தடுக்க, தன்னை வருத்திக்கொண்டு, தன்னைத்தானே சாட்டையால் அடித்துக் கொண்டு தமிழக மக்களிடையே இன்று விழிப்புணர்வு போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

தி.மு.க. அரசால் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குடும்பங்கள் ஏமாற்றப்படுவதையும், கடந்த சட்டமன்ற தேர்தல் அளிக்கப்பட்ட பொய் வாக்குறுதிகளை மறந்து, தமிழக மக்களை வஞ்சித்ததால், கொலை கொள்ளை, போதை, ஊழல், நிர்வாக சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட தமிழக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த சாட்டையடி போராட்டம் அமைந்துள்ளது.

இந்திய அரசியல் வரலாற்றில் கொடுங்கோலனாக அறியப்பட்ட அவுரங்கசீப் ஆட்சியை நினைவுபடுத்தும் வகையில் தமிழகத்தில் ஆட்சி நடத்தும் தி.மு.க. முதல்வர் ஸ்டாலின் அரசாங்கத்திற்கு முடிவுகட்ட மக்கள் தயாராகி விட்டனர். தி.மு.க. ஆட்சியை அகற்றும் வரை செருப்பு போட போட மாட்டேன் என்று அவர் எடுத்த முடிவு தமிழகத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில், தமிழக அரசியல் வரலாற்றில் மிகப்பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தும்.

மேலும் தமிழகத்தின் இருண்டகால தி.மு.க. ஆட்சிக்கு முடிவு கட்டும் விதத்தில், தமிழகத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் வெளியே பா.ஜ.க. சார்பாக மக்கள் ஆதரவுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்ற அண்ணாமலையின் அறிவிப்பு தமிழக அரசியலில் ஒரு அமைதிப் புரட்சியை உண்டாக்கி வருகிறது. மேலும் தமிழகத்தின் நலம் காக்க 48 நாள்கள் விரதம் இருந்து அறுபடை முருகனிடம் முறையிட உள்ள அண்ணாமலையின் கோரிக்கை கந்த சஷ்டி கவச நாயகன் முருகன் அருளால் நிறைவேறும். மக்கள் விரோத தி.மு.க. ஆட்சி விரைவில் அகற்றப்படும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.




# ஊடகத்துறை மீது தொடர்கின்ற அச்சுறுத்தலின் வெளிப்பாடே தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல்

## வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

(கி.வசந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் சுயாதீன ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் ஊடகத்துறை மீது தொடரும் அச்சுறுத்தலின் வெளிப்பாடே என்று வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் தாக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“போரின் போதும், போருக்குப் பின்னரான காலப் பகுதியிலும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள், கடத்தல்கள், கொலைகள் என்பன தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதற்கு ஊடகவியலாளர் கடத்தப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் கொல்லப்பட்டமை என்பவற்றுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படாமையே காரணம்.

அதன் நீட்சியாக ஆயுத பலம், பண பலம், அரசியல் பலம் கொண்டவர்கள் மக்கள் நலன் சார்ந்து பணியாற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களையும், அவர்கள் மீதான அடக்குமுறைகளையும் தொடர்ந்தும் செய்த வண்ணமே உள்ளனர். அதனையே கிளிநொச்சி மாவட்ட சுயாதீன ஊடகவியலாளரான தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலும் எடுத்துக்காட்டுகின்றது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு குறிப்பிட்ட சில மாதங்களுக்குள்ளேயே பகல் பொழுதில் பொதுமக்கள் செறித்த பகுதியில் ஊடகவியலாளரைக் கடத்த முற்பட்டதுடன், தாக்குதல் நடத்தப்பட்டமை ஊடகவியலாளர்களது பாதுகாப்பையும் கேள்விக்கு உட்பத்தியுள்ளதுடன், நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பவற்றையும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும் எனவும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கோருகின்றது.” - என்றுள்ளது.

# வவுனியா நகரில் தேசிய புலனாய்வுப் பிரிவினரின் அலுவலகத்துக்கான காணி கோரிக்கை நிராகரிப்பு



(கி.வசந்தன்)

தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு அலுவலகம் அமைப்பதற்காக வவுனியா நகரப் பகுதியில் காணி கோரப்பட்ட நிலையில் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காணியற்ற அரச திணைக்களங்கள், தேசிய புலனாய்வு அலுவலகம் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றை பிரித்து வழங்குவது தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது.

எனினும், குறித்த காணி விடயத்தில் தேசிய புலனாய்வு அலுவலகத்தின் காணிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று நேற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



# அரியாலையில் சிறப்பாக நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டு விழா

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டு விழா அரியாலை மகாமாரியம்மன் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது கலை, பண்பாட்டு நிகழ்வுகளுடன் விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட செயலர் செ.பத்மநாதன் முதன்மை விருந்தினராகவும், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், ஓய்வுநிலை அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலைஞர் வேல்.ஆனந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் "இளங்கலைஞர் விருது" மற்றும் "யாழ் முத்து" விருது வழங்கும் நிகழ்வும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன














# விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்திலேயே கோட்டாவின் அழிவு ஆரம்பமானது

## அநுர அரசுக்கு எதிர்க்கட்சி எச்சரிக்கை

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழிவு விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்திலேயே ஆரம்பமானது. இந்த அரசாங்கமும் தற்போது விவசாயிகள் மத்தியில் முழுமையான அதிருப்தியைப் பெற்றுள்ளது. எனவே கடந்த காலங்களை நினைவில் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது என்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி மக்களுக்கு பட்டினியில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அரிசி தட்டுப்பாட்டுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை. ஏற்கனவே சீரற்ற காலநிலையால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இனிவரும் போகங்களுக்கான உரத்தை வழங்குவதற்கும் அரசாங்கம் முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

விவசாயிகள், நுகர்வோர் என சகலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூடாத காலம் உரத்தட்டுப்பாடு விதிக்கப்பட்டதிலிருந்தே ஆரம்பமானது. அதனை இந்த அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். மறுபுறம் ஆசிரியர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இவையா? இன்று தேசிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் இரண்டாகப் பிளவடைந்துள்ளன.

கல்வி அமைச்சராக பிரதமர் ஹரிணி அமரசூரிய எடுத்த தீர்மானத்தைக் கூட நடைமுறைப்படுத்த முடியாத நிலைமையே காணப்படுகிறது. மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு தடை விதிப்பதற்கு அவரால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக மஹிந்த ஜாசிங்க கருத்து வெளியிட்டுள்ளார். தற்போது இது குறித்த சுற்று நிருபமும் மீளப் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு பயணித்தால் இந்த அரசாங்கத்தால் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது.

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தின் குறைகளை பகிரங்கமாக சுட்டிக்காட்டுவோம். அந்த வகையிலேயே தகுதியற்ற சபாநாயகர் பதவி விலகுவதற்கான உண்மைகளையும் நாட்டுக்கு வெளிப்படுத்தினோம். இவர்கள் மக்களை ஏமாற்றிய ஆட்சியைக் கைப்பற்றியவர்களாவர். மிகக் குறுகிய காலத்துக்குள் மக்களின் அதிருப்தியை பெற்றுக் கொண்ட அரசாங்கத்தை இதற்கு முன்னர் நாம் பார்க்கவில்லை. எதிர்காலம் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது எமக்கு தெரியாது,"– என்றார்.

# அஸ்வெசும நிலுவைத்தொகையை வழங்குவதற்குத் தீர்மானம்

அஸ்வெசும கொடுப்பனவை பெறும் குடும்பங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் நிலுவைத் தொகையை வைப்பிலிடவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவின் முதலாம் கட்டத்தின் கீழ் 212,000 423 குடும்பங்களுக்காக இதுவரை செலுத்தப்படாத நிலுவைத் தொகையை வைப்பிலிடவுள்ளதாக சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

1314 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை நிலுவைத் தொகையாக வைப்பிலிட வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Welfare Benefits Board
தேவை நாடுவோருக்கான சேவை
INDEED FOR IN NEED

# சிலரின் தற்காலிக திருப்திக்காக ஐ.தே.கவை பணயக்கைதியாக்க இடமளிக்க முடியாது

## ரவி கருணாநாயக்க கூறுகின்றார்



“நாட்டுக்கு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்ட ஐக்கிய கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப ஐக்கிய தேசிய கட்சியினர் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒருசிலரின் தற்காலிக திருப்திக்காக இந்த கட்சியை பணயக்கைதியாக்க இடமளிக்க முடியாது.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய செயலாளரும் புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பின்னர் அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக நானே இருக்கிறேன்.

நாடாளுமன்றத்திலும் ஐக்கிய தேசிய கட்சியிலும் பெரும்பான்மையானவர்கள் என்னுடனே இருக்கின்றனர் என்பது ஐக்கிய தேசிய கட்சியில் இருக்கும் அனைவரும் தெரிந்த விடயம். என்றாலும் கட்சியில் இருக்கும் ஒரு சிலரின் நடவடிக்கைகளினால் இந்த கட்சியை இல்லாதொழிக்க இடமளிக்க முடியாது.

ஐக்கிய தேசிய கட்சி என்பது மக்களின் கட்சி. இதனை பாதுகாக்க வேண்டும். இதில் இருந்த பலர் தற்போது வெளியில் சென்றாலும் அவர்களை நாங்கள் மீண்டும் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும். ஒருசிலரின் தற்காலிக திருப்திக்காக இந்த கட்சியை பணயக்கைதியாக இடமளிக்க முடியாது. எமது நாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பியது ஐக்கிய தேசிய கட்சியாகும்.

அதனால், அந்த வேலைத்திட்டங்களை நாங்கள் மீண்டும் நாட்டில் ஏற்படுத்த வேண்டும். அதற்காக அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். நாட்டில் திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தி, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தது ஐக்கிய தேசிய கட்சியாகும்.

நாட்டில் இருக்கும் மிகவும் பழைமை வாய்ந்த, நாட்டுக்கு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்ட இந்த கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப ஐக்கிய தேசிய கட்சி அனைவரும் ஒன்றுபட வேண்டும். நாங்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொண்டு செயற்படுவதால், அதன் பாதிப்பு எங்களுக்கே ஏற்படும்.

எனவே, ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்றுள்ளவர்கள் மற்றும் கட்சியின் நடவடிக்கைகளில் இருந்து தூரமாகி இருப்பவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் தலைதூக்கச் செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,”– என்றார்.

# சுதந்திரக் கட்சி தலைமையில் விரைவில் புதிய கூட்டணி

## துமிந்த திஸாநாயக்க தகவல்



“உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய விரைவில் இக்கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சு.க. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மறுசீரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் பலருடனும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எம்முடன் இணையவுள்ளவர்கள் யார் என்பது குறித்து விரைவில் அறிவிப்போம். சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2ஆம் திகதியிலிருந்து கட்சியின் புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட கூட்டணிகள் தற்போது நிறைவுக்கு வந்துள்ளன. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களுக்காக மாத்திரம் கூட்டணி அமைக்கப்பட்டதே தவிர, நிரந்தரமாக எவ்வித கூட்டணியும் அமைக்கப்படவில்லை. கடந்த காலங்களில் ஆட்சியமைத்த கட்சி என்ற ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இனிவரும் தேர்தல்களில் கதிரை அல்லது கை சின்னத்தில் போட்டியிடுவோம்.”– என்றார்.




# மின்சாரக் கட்டணம் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களை கேட்கும் நடவடிக்கை ஆரம்பம்

மின்சார கட்டணம் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை ஆரம்பமானது.

மத்திய மாகாணத்தில் பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளிட்ட 50 பேர் தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை எதிர்வரும் 30 ஆம் திகதியும் மேல் மாகாணத்தில் அடுத்த மாதம் 10ஆம் திகதியும் இடம் பெறவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவரேனும் ஒருவருக்கு கருத்துக்களை முன்வைக்க வேண்டுமாயின் 0772943193 எனும் வாட்ஸ் அப் இலக்கத்தினூடாக தம்மை பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்துக்கள் கேட்டறியப்பட்ட பின்னர் மின்கட்டண திருத்தம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.




# நாடு முழுவதும் பொது ஒழுங்கை நிலைநாட்ட ஆயுதப்படையினருக்கு ஜனாதிபதி அழைப்பு

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

நாட்டின் சகல நிர்வாக மாவட்டங்களினதும் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஆயுதம் தரித்த முப்படையினரை பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இராணுவம், கடற்படை மற்றும் வான்படை ஆகியவற்றின் சிப்பாய்களை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான கட்டளை அடங்கிய அதிவிஷேட வர்த்தமானி வெளியானது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது சரத்திற்கமைய ஜனாதிபதிக்கு உரித்தான அதிகாரத்தின் பிரகாரம் ஆயுதம் தரித்த பாதுகாப்பு தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வர்த்தமானி அறிவித்தலானது மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.



# இடமாற்றங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வடக்கு ஆளுநருடன் ஆசிரியர் சங்கத்தினர் கலந்தாய்வு

வடக்கு மாகாணத்தில் கல்விப்புலத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய இடமாற்றங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித் துக் கலந்துரையாடினர்.

2017ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களுக்கும் முதல் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் அந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விடயம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளு நர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடி னர்.

மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைக ளின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், அதில் தலையீடுகள் இருக்கின்றன எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வேறு சில மாகாணங்கள் பரீட்சைக்கு நிதி ஒதுக்குகின்றமையை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை பின்பற்றுமாறு கோரிக்கை முன்வைத்தனர். அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு



ஆளுநர் பணித்தார்.

மேலும், பாடசாலைகள் மற்றும் கல்விப்புலத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந் தையா பிரட்லி ஜெனட், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.






**கேள்வி : நம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் கல்வித் தகைமை பற்றி, டாக்டர் அர்ச்சுனா பேசியவற்றைக் கேட்டீர்களா?**

பதில்: இந்த மனுசனுக்கு என்ன நடந்து விட்டது என்று தெரியவில்லை. அவர் பேசியது அநாகரிகத்தின் உச்சம். மாற்றினத்தாரோடு பழகும் நாகரிகம் தெரியாமல் பேசியிருக்கிறார். இதுவரை தமிழ்த் தலைவர்கள் பற்றி, நல்ல அபிப்பிராயம்தான் சிங்களத் தலைவர்கள் மத்தியில் இருந்து வந்தது. அதை இந்த மனிதர் போட்டு உடைத்து விடுவார் போல் தெரிகிறது. இது அவர்களின் பிரச்சினை. இது சம்பந்தமாய் அவர்கள்தான் வாதிட வேண்டும். நாம் அதற்குள் தலைபோடப் போயிருக்கக்கூடாது.

தேசப் பிரச்சினை பற்றிப் பேசுவது போல நினைத்துக்கொண்டு, இந்தத் தனிமனிதர் பற்றிய பிரச்சினைக்குள் அர்ச்சுனா தலையிட்ட விதம் தவறானது. தமிழர், சிங்களவர் பிரச்சினை ஓரளவு ஓய்ந்திருக்கும் இன்றைய நிலையில், அதனை மீண்டும் இவர் கிளப்பி விட்டுவிடுவாரோ என்று அச்சப்பட வேண்டியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலின் போது, இதே அர்ச்சுனாதான் கிண்ணியாவில் நடந்த சஜித்தின் கூட்டம் ஒன்றிற்குச் சென்று, வலியப் போய் மேடையின் முன்வரிசையில் உட்கார, அங்குள்ளவர்கள் அவரை எழுப்பிப் பின் வரிசைக்குக் கொண்டு சென்றனராம் என்பது செய்தி. இப்படியாய் வலியப் போய் சஜித்துடன் இணையப் பார்த்த இவர், இப்போது அவரை இழிவுபடுத்துவது "சீ......சீ..... இந்தப் பழம் புளிக்கும்" என்ற கதையாகத்தான் இருக்கிறது.

சஜித் பற்றி இவர் பேசி உட்கார்ந்ததும், அடுத்து எழுந்து பேசிய சிங்கள உறுப்பினர் ஒருவர், கிண்ணியாவில் சஜித்தின் மேடையில் யாரோ ஒருவர் வலிய ஏறப்போனாராமே எனக் கிண்டலடிக்க, டாக்டர் "கப்சிப்" என அடங்கிவிட்டதைக் கண்டு நாமும் தலைகுனிய வேண்டியதாயிற்று.

வழக்கமாய் நான் சொல்லுகிற கதை ஒன்றுண்டு. காட்டிற்குள் இருந்த ஒரு முயல், ஆணவம் கொண்டு, தானேதான் காட்டிற்கு இராசா என நினைந்ததாம். அதனால் அது எதிரில் வரும் விலங்குகளிடம் எல்லாம் வலியப் போய் "காட்டுக்கு இராசா யார் தெரியுமா?" என்று கேட்குமாம். மற்றைய விலங்குகள், அதன் அறியாமையை நினைத்துச் சிரித்துவிட்டுப் பதிலேதும் சொல்லாமல் போய்விடுமாம்.

ஒரு நாள் மதங்கொண்ட யானை ஒன்று எதிரில் வர, இந்த முயல் வந்த யானையின் நிலையை உணராது, அதனிடம் வழக்கம் போலவே "காட்டுக்கு இராசா யார் தெரியுமா?" என்ற கேள்வியைக் கேட்டதாம். கோபம் கொண்ட யானை தனது தும்பிக் கையால், முயலைத்தூக்கி வீசி எறிந்து விட்டு நடையைக் கட்டியதாம்.

தூரத்தில் போய் விழுந்த முயல், உடைந்து போன தன் காலை இழுத்து இழுத்து நடந்தபடி, "தெரியாது என்றால் தெரியாதென்று சொல்ல வேண்டியது தானே? அதற்கு ஏன் என்னைத் தூக்கி எறிவானாம்?" எனக் கேட்டுக் கண்ணீர் வடித்ததாம்.

அர்ச்சுனாவின் வலியக் கொழுவும் செயல்கள், இந்த முயலைத்தான் நினைவூட்டுகின்றன. மதம் பிடித்த யானை ஏதும் இவர் முன் வாராதிருக்கப் பிரார்த்திப்போமாக.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : எலிக்காய்ச்சலில் இருந்து யாழ்ப்பாணம் தப்புமா?**

பதில் : புலிக் காய்ச்சலிலிருந்தே தப்பிய ஊருக்கு, எலிக்காய்ச்சல் எல்லாம் எம்மாத்திரம்?

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : பேச்சாற்றல் மிக்க உங்களை, இன்று பேச்சுத்திறமையால் ஈர்ப்பவர் யார்?**



பதில் : இன்றைய பேச்சாளர்களில் பலர் என்னை ஈர்த்து வருகிறார்கள். அவர்களின் பெயர்களை இங்கு சொல்லி, மற்றவர்களின் கோபத்திற்கு ஆளாக நான் விரும்பவில்லை. ஆனால் தமிழகத்தில் வேறொருவரின் பேச்சாற்றல் என்னை மிகவும் ஈர்க்கிறது.

தர்க்க ரீதியாகத் தனது கருத்துக்களை உறுதியாய் நிறுவும் திறன், தன்னால் ஏற்கப்பட்ட கொள்கைக்கு உறுதி கொடுக்கும் ஆற்றல், அக்கொள்கைக்கு இடர் செய்ய மற்றவர்கள் முனையும் போது கொதித்து எழுகின்ற துணிவு, பேச எடுத்துக் கொண்ட விடயத்தின் முழு விவரங்களையும் தன் விரல் நுனியில் வைத்திருக்கும் மதிநுட்பம், கேள்வி கேட்கும் எதிரா

தொடர்ச்சி▼

தொடர்ச்சி ▲

ளிகளைக் கேள்வி கேட்டே மடக்கும் வித்தை, கேள்வி கேட்டவர் வாய் மூடும் முன் “எக்ஸ்பிரஸ்“ வேகத்தில் பதிலளிக்கும் விதம், அந்த வேகத்திலும் சொல்ல வந்த கருத்தில் தடுமாற்றமில்லாத நிதானம், சோழ மன்னனை எடுத்தெறிந்து “மன்னவனும் நீயோ?“ எனக் கேட்ட கம்பனுக்கு நிகரான, இரசிக்கத்தக்க திமிர் என ஒரு பேச்சாளனுக்குத் தேவையான முழுத் தகுதியையும் கொண்டு கலக்கி வருகிறார் ஊடகவிய லாளரான “இரங்கராஜ் பாண்டே“ அவர்கள்.

வழக்கமாகக் கேள்வி கேட்பவர்கள் துணிவுடன் இருக்க, பதில் சொல்பவர்கள்தான் அச்சப்பட்டு நிற் பார்கள். ஆனால் பாண்டேயிடம், பேட்டியெடுக்க வருபவர்களின் மனநடுக்கம் அவர்களை அறியா மலே வெளிப்படுகிறது. இவரின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத அவர்கள், இவரிடம் தொடுப்ப தற்கான கேள்விகளை, காற்றில் தேடிக் கஷ்டப்படும் காட்சி நகைப்பை ஊட்டுகிறது.

ஒரேயொரு மனவருத்தம். தரம் குறைந்த சில பட்டிமண்டபங்களுக்கு நடுவராய் இருப்பதையும், வில்லனாக சினிமாவில் வருவதையும் இவர் இனித் தவிர்த்து விட்டால் நல்லதென்றே தோன்றுகிறது.

என்ன ஒன்று, சுத்தமான “சங்கியாய்“ப் பெய ரெடுத்திருக்கிறார் அவர். அவரைப் பாராட்டும் இந்தப் பதில் என்னையும் “சங்கி“யாக்கப்போவது நிச்சயம்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : தமிழ் நாட்டு சட்ட சபையில் முதல்வரை, எதிர்கட்சித் தலைவர் “இ.பி.எஸ்”வாங்குவாங்கென்றுவாங்கிய, காட்சியைப் பார்த்தீர்களா?**



பதில்: பார்த்தேன், “பூனை மெலிந்தால் எலி ஏறி விளையாடுமாம்“. “இ.பி.எஸ்.“இன் உற்சாகத்தில் ஆளுங்கட்சியின் பலவீனம் தெரிகிறதோ?

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : புதிய அரசியல் அமைப்புச் சீர் திருத்தத்தைக் கொணர, மூன்று ஆண்டு களாவது செல்லும் என்று அமைச்சர் ஒருவர் பேசி இருக்கிறார். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : இந்தக் காலதாமதம் நல்லதற்கில்லை என்று தோன்றுகிறது. காலநீட்சி எதிரிகள் பல மடைய உதவிவிடும். அரசு இன்றிருக்கும் பலத் தோடு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும் இருக்குமா என்பது பதிலுரைக்க முடியாத கேள்வியே. “ஆறின கஞ்சி பழங்கஞ்சி“ என்று நம் பெரியவர்கள் சும்மா சொல்லவில்லை.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : இப்போதும் தொலைக்காட்சிக ளில் தொடர் நாடகம் ஏதேனும் பார்க் கிறீர்களா?**

பதில் : விஜய் டீவியில் “பாண்டியன் ஸ்டோர்ஸ்“ என்ற நாடகம் ஒளிபரப்பாகிறது. முன்பு இந் நாடகத் தின் ஒரு பகுதி முடிந்து, இப்போது அதன் இரண் டாம் பாகம் தொடங்கியிருக்கிறது. ஒரு சில பாத்திர மாற்றத்தோடு விறுவிறுப்பாக இந் நாடகம் நடந்து வருகிறது. குடும்பத்தோடு இருந்து பார்க்க வேண்டிய நாடகம் இது.

காலைக்கடன்கள் முடித்து விட்டு இறைவழி பாடு இயற்றிய பின் நான் இப்போதெல்லாம் முதற் செய்யும் வேலை இந்த நாடகத்தைப் பார்ப்பதுதான். அவ்வளவு அருமையாக அந்த நாடகம் போய்க் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு “எபிசோட்டும்” உள் ளத்தை அவ்வளவு கவருகின்றன. நற்பண்புகளை விதைத்து வாசகர்களை ஈர்க்கும் அதன் டைரக்டர் நிச்சயம் பாராட்டப்படவேண்டியவர்.

இதற்கு மேலும் பாராட்டலாம், ஆனால் அதி கம் பாராட்டவும் பயமாக இருக்கிறது. இப்படித்தான் முன்பொருமுறை “சண்“ டீவியில் வந்த “எதிர்நீச்சல்“ நாடகம் பற்றி “ஆஹா, ஓஹோ“ எனப் பாராட்டி எழுதினேன். யார் கண்பட்டதோ தெரியவில்லை. அரைவாசிக்கு மேல் அந்த நாடகத்தை “சீ” இதுவும் ஒரு நாடகமா என நினைக்கும்படி கொண்டுபோய் முடித்தார் அதன் டைரக்டர்.

“பாண்டியன் ஸ்டோர்ஸ்” இல் எவர் கண்ணும் படாமல் இருப்பதாக! ஒரு உபரிச் செய்தி – “எதிர் நீச்சலின்“ இரண்டாம் பாகமும் சென்ற திங்கட் கிழமையிலிருந்து ஒளிபரப்பாகத் தொடங்கியிருக்கி றது. இம்முறையேனும் அது விட்டதைப் பிடிக்குமா என்று பார்ப்போம்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: கலைஞர், தனது மகனான ஸ்டாலினை முதல்வராக்கினார். தற்போது ஸ்டாலின் தனது மகனான உதயநிதியைத் துணை முதல்வராக்கியிருக்கிறார். இவை இரண்டிற்கும் இடையிலான வித்தியாசம் என்னவென்று சொல்லுங்கள் பார்க்க லாம்?**

பதில்: இது, உங்கள் ஊரில் நடக்கும் என்னறிவிற்கு



அப்பாற்பட்ட விடயம். ஆனாலும், அறிவாளியான எனது இந்திய நண்பர் ஒருவரிடம் உங்கள் கேள்வி யைக் கேட்டுப்பார்த்தேன். அவர் “கலைஞர், கட்சிக் குள் குடும்பத்தைக் கொண்டுவந்தார். தற்போதைய முதல்வரோ குடும்பத்திற்குள் கட்சியைக் கொண்டு வந்துவிட்டார்“ என்று ஒரே தொடரில் பதிலை முடித்துக் கொண்டார். அந்தப் பதில் சரியா? பிழையா? என நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

**கேள்வி : "யூடியூப்பில்" பலவிதமான நிகழ்ச்சிகள் அன்றாடம் வெளிவருகின்றன. அவற்றில் உங்களை வெகுவாகக் கவரும் நிகழ்ச்சி ஏதேனும் உண்டா?**

பதில் : இல்லாமல் என்ன? ஒன்றல்ல பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. நீங்கள் கேட்டதும் மனதில் தோன்றும் எண்ணத்தை முதலில் பதிவு செய்கிறேன். "WOW தமிழா" என்று ஒரு சனல் இருக்கிறது. அதில் சந்திரசேகர் என்று ஒருவர் அற்புதமான பேட்டிகளைக் கண்டுவருகிறார். அவரது நிகழ்ச்சி ஒன்றையும் நான் தவற விடுவதில்லை.

WOW தமிழா! குதூகலம் UNLIMITED

எப்போதும் கோபப்படாத சாத்வீகமான முகத் தோற்றத்தோடு, தான் நினைக்கும் விடயத்தை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் அவரது துணிவும், மறுதலையான கேள்விகளையும் பயமோ, பதற்றமோ இல்லாமல் சாதுவாய் கேட்கும் அவரது புதிய பாணியும் ரசிக்க வைக்கின்றன.

பேட்டியளிப்போரின் கோபத்தால் தானும் கோபப் பட்டு விடாமலும், அதேநேரத்தில் தன் கருத்தை அவர்களுக்குப் பயந்து விட்டுக் கொடுக்காமலும், நிதானமாக நினைத்தவற்றை முகத்திற்கு நேராய்க் கேட்கின்ற அவரது நிமிர்வு வியக்க வைக்கிறது.

பெருத்த இசை அறிவு கொண்ட இவர், தர்க்கரீதி யாக வாதிடுவதிலும் வல்லவராய் இருக்கிறார். ஆரம்பத்தில் இசைத்துறை சார்ந்தோரையே பேட்டி கண்டு வந்த இவர், இப்போதெல்லாம் இயற்துறை, நாடகத்துறை, சமூக விடயங்கள் என்பவற்றையும் கையில் எடுக்க ஆரம்பித்துள்ளார். பாண்டேயைப் போல "ராஜசு" வீச்சுக் காட்டாமல், "சாத்வீகமாகவே" கேள்வி கேட்டு, எதிராளிகளை அதிர வைக்கும் இவரது பாணி புதுமையானது.

வெறுமனே தர்க்கச் சுவைக்காய் மட்டுமன்றி, விடயத் தேடல்களுக்காகவும் இவரது பேட்டிகளை விரும்பிக் கேட்கலாம்.

அண்மையில், "சொல்வேந்தர்" சுகிசிவத்துடன் நடத்திய பேட்டியில், அத்தகைய ஆற்றலாளரைக் கூட, அவர் ஓரளவு சமநிலை தவற வைத்தது சுவாரஸ்யம். நடிகர் எஸ்.வி.சேகருடன் இவரெடுத்த பேட்டியால், எஸ்.வி.சேகரின் மதிப்பு பலபடிகள் இறங்கிப் போனது உண்மை. இவர் போட்ட பந்துகளை எதிர் கொள்ள முடியாமல், தன் தகுதி இறங்குவது தெரியாமலே எஸ்.வி.சேகர் என்னென்னவோ பிதற்ற ஆரம்பித் தார். பேட்டியாளரை அவமரியாதை செய்து அவர் பேசிய பேச்சுக்களால் நிதானம் தவறிப் போகாமல், தொடர்ந்தும் அவரை அதிரச் செய்யும் கேள்விப் பந்து களை வீசிய இவரது இலாவகம் வியக்க வைத்தது.

கடைசியாய் நான் கேட்ட இவரது பேட்டியில், இசைக் கலைஞர்களான நித்தியஸ்ரீ, ரவிக்கிரண், சின்மயா சகோதரிகள் ஆகியோரை தனியொருவராய் நின்று நிர்வகித்தார். ஆழமான செய்திப் பகிர்வுகள், அப் பேட்டியில் பதிவாகின.

இசைப் பட்டிமண்டபத்திற்கு, டி.என்.சேஷ கோபாலன் போன்ற ஓர் அறிஞரை நடுவராய் நிய மிக்காமல், சாலமன் பாப்பையா, பட்டிமண்டப ராஜா போன்றோரை நடுவர்களாய் நியமித்தது எப்படிச் சரியாகும்? என்ற அவரது கேள்வியில், துணிவும், உண்மையும் தெளிவாக வெளிப்பட்டன.

முதலில் இக் கேள்விக்கு, சமாளிப்பான பதில்களைச் சொல்லத் தொடங்கினாலும் முடிவில் ரவிக்கிரண் அவர்கள், "இப்போதுதான் அந் நிகழ்ச்சி பற்றி இத்தகைய ஒரு பதிவு வந்திருக்கிறது. இனி வரும் நிகழ்ச்சிகளில் அது பற்றிச் சிந்திப்போம்" என்று பதிலுரைத்து, மதிப்புப் பெற்றார்.

பல பேட்டிகளில், இசைக்கலைஞர்கள் பலரிடம் ரி.எம்.கிருஷ்ணாவின் கருத்துக்களை மறுதலித்து இவர் தொடுத்த கேள்விகள், நியாயபூர்வமானவை. அவரது அக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாம லும், ரி.எம்.கிருஷ்ணாவைப் பகைத்துக் கொள்ள விரும்பாமலும், அக் கலைஞர்கள் தடுமாறித் தத்த ளித்தனர்.

மொத்தத்தில் "WOW தமிழா" உண்மையிலேயே "Wow" சொல்ல வைப்பது நிஜமே.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : புதிய அரசியல் அமைப்புச் சீர் திருத்தம் பற்றி, ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களோடு பேச இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறதே?**



பதில் : கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. இனி இந்நாட்டில் இன, மத, பேதம் இருக்காது என உரைத்து விட்டு, குறித்த மதத் தலைவர்களோடு மட்டும், அரசி யல் அமைப்புச் சீர்திருத்தம் பற்றிப் பேசுவது, எப்படிச் சரியாகும்? என்று தெரியவில்லை. அப்படிப் பேசுவ தானால், மும்மதத் தலைவர்களோடும் அல்லவா பேசவேண்டும். இப் புதிய அரசின் கால்களும், பழைய பாசியில் வழுக்கப் பார்க்கிறதோ என்று ஐயம் உண்டாகப் பார்க்கிறது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி : வரும் உள்ளூராட்சித் தேர்தலில், யாழ்ப்பாணத்தில் யார் வெல்லப் போகி றார்கள்? என்பதையும், யார் மேயராய் வரப்போகிறார்கள் என்பதையும் ஊகி யுங்கள் பார்க்கலாம்.**

பதில் : இன்றைய நிலை தொடருமானால், டாக்டர் அர்ச்சுனா நிறுத்தப் போகும் அணி வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்து மேயர் யார் என்றா கேட்கிறீர்கள்? அதில் என்ன சந்தேகம்? இவர்களது அணி வென்றால், மேயராகப் போவது தங்கமான தங்கம்தான்.

தமிழர்களின் தலைவிதி எப்படியெல்லாம் எழுதப் பட்டுள்ளதோ யார் அறிவார்?

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

# இன்றைய ராசி பலன்கள் - 28.12.2024




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மன நிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதி நிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூட எளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்புக் காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்து கொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனைத் தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்புப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களைச் செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களைச் சந்திக்க நேரும்.

சில குடும்பப் பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியானப் தருணங்களைப் பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று இலக்குகளை அடைவதற்கு உகந்த நாள். இன்று எதிர்பாராத நன்மைகள் நேரலாம்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் மனதில் பொங்கும் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.12.2024

## தனுசு

ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.

## கும்பம்

நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாக திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.

## மீனம்

சில குடும்பப் பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்துகொள்ள இயலாது.



